


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY

சென்னை மலர்: 01 இதழ்: 100 22.11.2025 சனிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 100 Saturday Pages 4 Rs.5/-

LOCAL NEWS ,EVENTS & ADS - JOB, PROPERTY, HOUSEHOLD, EDUCATION - CHENNAI

# வினை தீர்க்கும் விநாயகர்

மனிதர்கள் முதல் தேவர்கள் வரை யாரும் எந்தவொரு காரியத்தை ஆரம்பிக்கும்போதும், அது இடையூறின்றி இனிதே நடந்து முடிய விநாயகரை வழிபடுவது ஐதீகமாகும். பூஜை, ஹோமம் உள்ளிட்ட சகல சுப காரியங்களை நடத்தும்போது முதலில் விநாயகர் பூஜையைச் செய்த பின்னர்தான் மற்ற தேவதைகளுக்குப் பூஜைகள் செய்யப்படும். எதையும் எழுதுவதற்கு முன்பாக முதலில் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்குவது நமது பாரம்பரியமாக உள்ளது. முக்காலத்துக்கும் வழிகாட்டும் பிள்ளையார் கணங்களுகெல்லாம் அதிபதி. நற்காரியங்கள் அனைத்துக்கும் அவரே ஆதாரம். அவரை வழிபடுவதால் ஞானம், ஆனந்தம், வெற்றி ஆகிய அனைத்தும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.



சதுர்த்தி நாளில், அதிகாலையில் நீராடி, வீட்டில், பூஜை நடைபெறும் இடத்தைச் சுத்தப்படுத்தி, மாக்கோலமிட்டு அலங்கரிக்க வேண்டும். மண்ணால் பிள்ளையார் விக்கிரகம் செய்து வைத்து, அருகம்புல், வெள்ளெருக்கு மாலை சாத்தி, சந்தனம், குங்குமம் திலகமிட்டு அலங்கரிக்கலாம். நைவேத்யமாக மோதகம், அப்பம், அவல், பொரி கடலை, தேங்காய்ப்புட்டு, பொங்கல், எள்ளுருண்டை, தேன், சர்க்கரை, தினை மாவு, பால், மா, வாழை, கரும்பு, நாவற்பழம், விளாம்பழம், இளநீர் ஆகியவற்றை தாம்பூலத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

விநாயகர் துதிப் பாடல்களைப் பாடி, தூபம், தீபம் ஆகிய உபசாரங்கள் செய்து, வழிபாட்டை முடிக்கலாம். சதுர்த்தியன்று விநாயகரை வழிபடுவதால், சந்திரனின் அனுக்கிரகம் கிடைப்பதுடன், கேது, சனி ஆகிய கிரகங்களால் ஏற்படும் தோஷங்களும் நீங்கும்.

அதன் மூலம் வீட்டில் செல்வம் பெருகும், அறிவு பிரகாசிக்கும், குடும்ப ஒற்றுமை ஏற்பட்டு, பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள் என்று புராணங்கள் குறிப்பிடுகின்றன.

சூரியனுக்குரிய நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை நேரத்தில் வீட்டிலும், ஆலயத்திலும் விநாயகரை வழிபட்ட பின், அம்பிகைக்கு ஏழு நெய் தீபங்கள் ஏற்றி வழிபட்டால், ராகு, கேது தோஷங்கள் நீங்கி, தடைபட்ட கல்யாணம் நடக்கும். பிள்ளைச் செல்வம் இல்லாத தம்பதியருக்கு, பிள்ளை பாக்கியம் கிட்டும் என்பது நம்பிக்கை.






## வளரும் வணிகம்

# இந்திய ஜவுளி ஏற்றுமதி 10% அதிகரிப்பு



உலகளாவிய சவால்கள் மற்றும் முக்கிய சந்தைகளில் வரி சிக்கல்கள் இருந்த நிலையிலும், 111 நாடுகளுக்கான இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி கடந்த ஏப்ரல்-செப்டம்பா காலகட்டத்தில் 10 சதவீதம் உயாந்துள்ளது.

இது குறித்து மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2025 ஏப்ரல்-செப்டம்பா் காலகட்டத்தில், 111 நாடுகளுக்கு நாட்டின் ஜவுளி ஏற்றுமதி 8,489.08 கோடி டாலராக உள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இது 10 சதவீதம் அதிகம். அப்போது இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி 7718.55 கோடி டாலராக இருந்தது.

மதிப்பீட்டு காலகட்டத்தில் ஒட்டுமொத்த ஜவுளி, ஆடைகள் மற்றும் அவை தொடாபான தயாரிப்புகளின் ஏற்றுமதி 2024-ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீதம் உயாந்துள்ளது.

கடந்த ஏப்ரல் - செப்டம்பா் காலகட்டத்தில் உயா் வளா்ச்சி கண்ட முக்கிய ஏற்றுமதி சந்தைகள் ஐக்கிய அரபு அமீரகம் (14.5 சதவீதம்), பிரிட்டன் (1.5 சதவீதம்), ஜப்பான் (19 சதவீதம்), ஜொமனி (2.9 சதவீதம்), ஸ்பெயின் (9 சதவீதம்), பிரான்ஸ் (9.2 சதவீதம்) ஆகியவை ஆகும். எகிப்து (27 சதவீதம்), சவுதி அரேபியா (12.5 சதவீதம்), ஹாங்காங் (69 சதவீதம்) ஆகிய பிற சந்தைகளிலும் மதிப்பீட்டுக் காலாண்டில் ஜவுளி ஏற்றுமதி அதிக வளா்ச்சி கண்டுள்ளது.

மதிப்பீட்டுக் காலகட்டத்தில் ஜவுளி ஏற்றுமதியின் வளா்ச்சிக்கு ஆயத்த ஆடைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த காலகட்டத்தின் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி வளாச்சி 3.42 சதவீதமாகவும், சணல் ஏற்றுமதி வளாச்சி 5.56 சதவீதமாகவும் உள்ளன.

இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி புதிய சந்தைகளுக்கு பரவுவது, அரசின் தன்னிறைவு இந்தியா, இந்தியாவில் தயாரிப்போம் திட்டங்களை வலுப்படுத்துகிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அந்நியச் செலாவணி கையிருப்பு 68,703 கோடி டாலராகச் சரிவு

ரிசா்வ் வங்கி வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிப்பதாவது: கடந்த 7-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 269.9 கோடி டாலா் குறைந்து 68,703 கோடி டாலராக உள்ளது.

அக்டோபா் 31-ஆம் தேதியுடந் நிறைவடைந்த முந்தைய வாரத்தில் அது 562.3 கோடி டாலா் குறைந்து 68,973 கோடி டாலராக இருந்தது.

நவம்பா் 7-ஆம் தேதியுடன் நிறைவடைந்த மதிப்பீட்டு வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான வெளிநாட்டு நாணய சொத்துகள் 245.4 கோடி டாலா் குறைந்து 56,213.7 கோடி டாலராக உள்ளது. டாலா் அல்லாத யூரோ, பவுண்டு, யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் மதிப்பு ஏற்ற, இறக்கங்கள் டாலா் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகளாகும். மதிப்பீட்டு வாரத்தில் இந்தியாவின் தங்கம் கையிருப்பு 19.5 கோடி டாலா் குறைந்து 10,153.1 கோடி டாலராக உள்ளது. சிறப்பு வரைவு உரிமைகள் (எஸ்டிஆா்) 5.1 கோடி டாலா் குறைந்து 1,859.4 கோடி டாலராக உள்ளது.

சா்வதேச நிதியத்தில் இந்தியாவின் கையிருப்பு மதிப்பீட்டு வாரத்தில் மாற்றமின்றி 477.2 கோடி டாலராக உள்ளது என்று ரிசா்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.


















## சினிமா...சினிமா



# ‘வாரணாசி’ vs ‘மருதநாயகம்’ - இணையத்தில் கிளம்பிய விவாதம்!


எஸ்.எஸ்.ராஜமவுலி இயக்கத்தில் மகேஷ் பாபு நடிக்கும் படம் ‘வாரணாசி’. இந்த படத்தின் தலைப்பையும் அது தொடர்பான அறிமுக டீசரையும் படக்குழு நேற்று குளோப்டிரோட்டர் என்ற பிரம்மாண்ட நிகழ்வில் வெளியிட்டது. இதில் அந்த டீசரில் கிராபிக்ஸில் வடிவமைக்கப்பட்ட காளை ஒன்றில் நடிகர் மகேஷ் பாபு அமர்ந்து வருவதை போன்று அமைக்கப்பட்டிருந்தது. படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரிலும் இந்த காட்சி இடம்பெற்றிருந்தது.

இந்த டீசர் மற்றும் போஸ்டர் சமூக வலைதளங்களில் வெளியானதுமே, பலரும் கமல்ஹாசன் இயக்கி, நடித்து பாதியில் கைவிட்ட ‘மருதநாயகம்’ படம் குறித்து நினைவுகூரத் தொடங்கிவிட்டனர். கமல்ஹாசனின் கனவுத் படமான ’மருதநாயகம்’ 1997-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்த காலகட்டத்திலேயே மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவான இப்படம் கடும் நிதிப் பற்றாக்குறை, தயாரிப்புச் சிக்கல்கள் காரணமாக பாதியிலேயே கைவிடப்பட்டது.

இந்த படத்தின் சிறிய டீசர் ஒன்று அப்போது வெளியானது.

அதில் ஒரு காளை மாட்டின் மீது ஓடிவந்து ஏறும் கமல், அதில் கயிறு எதுவும் இன்றி காட்டுக்குள் வேகமாக ஓட்டிச் செல்வார். கிராபிக்ஸ் தொழில்நுட்பங்கள் பெரியளவில் இல்லாத அந்த காலத்தில் உண்மையான காளை மாட்டை பயன்படுத்தி, பல மாதங்கள் பயிற்சி எடுத்து இந்த காட்சியை எடுத்ததாக கமல்ஹாசன் ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது ‘வாரணாசி’ அறிமுக டீசரில் மகேஷ்பாபு கிராபிக்ஸ் மாட்டில் அமர்ந்து வரும் காட்சியுடன் ஒப்பிட்டு பலரும் கமல்ஹாசனின் உழைப்பையும், அர்ப்பணிப்பையும் நெகிழ்ந்து பாராட்டி வருகின்றனர்.

இந்திய சினிமாவில் தயாரிக்கப்பட்ட மிக அதிக பொருட்செலவிலான திரைப்படங்களில் ’மருதநாயகம்’ படமும் ஒன்றாக அப்போது கருதப்பட்டது.

இப்படத்தின் பட்ஜெட் தோராயமாக ரூ.80 கோடி. இளையராஜா இசையமைக்க, சுஜாதா கதை எழுத நாசர், விஷ்ணுவர்தன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கவிருந்தனர்.

1997-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இப்படத்தின் பிரம்மாண்ட தொடக்க விழாவில் அப்போதைய முதல்வர் கருணாநிதியுடன், இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் கலந்துகொண்டார்.

கிராபிக்ஸ் அல்லது வேறு ஒரு நடிகரை வைத்து இப்படத்தை மீண்டும் உருவாக்க கமல் திட்டமிட்டு வருவதாகக் தகவல்கள் வெளியாகின. ஆனால் அதுகுறித்த உறுதியான அறிவிப்புகள் எதுவும் வெளியாகவில்லை

## சினி.. துளி...

### 15 ஆண்டுகளுக்கு பின், மலையாளத்தில் மோகினி ரீஎன்ட்ரி

❍ தமிழில் தனது 14வது வயதிலேயே ’ஈரமான ரோஜாவே’ படத்தில் நாயகியாக அறிமுகமானவர் நடிகை மோகினி. தொடர்ந்து மலையாளம், தெலுங்கு, கன்னடம் படங்களில் நடித்து வந்தார். கடைசியாக மலையாளத்தில் சுரேஷ் கோபி நடித்த ’கலெக்டர்’ படத்தில் நடித்திருந்தார். தற்போது 15 ஆண்டுகளுக்கு பின், மலையாளத்தில் ரீஎன்ட்ரி கொடுக்கிறார் மோகினி.

❍ ’அண்ணாமலை, பாட்ஷா’ உள்ளிட்ட பல படங்களை இயக்கிய சுரேஷ் கிருஷ்ணா, ’அனந்தா’ என்ற தலைப்பில் சாய் பாபா பற்றிய பக்தி படத்தை இயக்கி வருகிறார்.

❍ ஜெயிலர் 2’ படத்தை அடுத்து ரஜினி நடிக்கும் படத்தை சுந்தர். சி இயக்க உள்ளாராம். கதை விவாத பணிகள் நடந்து வருகிறது. கமலின் ராஜ்கமல் நிறுவனம் தயாரிக்கிறது.

❍ ரஜினி, கமல், விஜய், கார்த்தி போன்ற நடிகர்களின் படங்களை இயக்கி பிரபலமானவர் லோகேஷ் கனகராஜ். தற்போது அருண் மாதேஸ்வரன் இயக்கும் படத்தில் நாயகனாக அறிமுகமாக உள்ளார்.

## நம் நலம்...



# ஒவ்வொரு வாழைப்பழமும் ஒரு மகத்துவம்!



பழ வகைகளில் மிகவும் குறைந்த விலையில், அதிக ஊட்டச்சத்துக்களை கொண்டுள்ள பழம் என்றால் அது வாழைப்பழமே ஆகும். வாழைப் பழங்களில்(*Bananas*) பல வகைகள் உள்ளன. நமக்குத் தெரிந்த வாழைப்பழ வகைகள் இரண்டு, மூன்று தான். ஆனால், அதையும் தாண்டி வாழைப்பழங்களில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு வாழைப்பழங்களும் அதற்கென தனி சுவையையும், ஊட்டச்சத்துகளையும் கொண்டுள்ளன.

### 1. பூவன் பழம்

இந்த வகை வாழைப்பழம் பார்ப்பதற்கு சிறிய அளவில் இருக்கும். நல்ல ஒரு இனிப்பான சுவையில் இருக்கும். பூவன் பழம் சாப்பிடுவதால், செரிமான பிரச்சனை நீங்குகிறது. அதேபோல் உடல் தசைகளும் வலிமையடைகின்றன. இந்த வாழைப்பழத்தை தினமும் எடுத்துக் கொண்டால் பல ஆரோக்கிய நன்மைகள் நம் உடலில் ஏற்படும். ஆஸ்துமா, சர்க்கரை நோய் உள்ளவர்கள் இந்த பழத்தை சாப்பிடுவதை தவிர்த்துக் கொள்வது நல்லது.

### 2. நாட்டு வாழைப்பழம்

மற்ற பழங்களின் தோலை விட இதன் தோல் தடினமாக இருக்கும். ஆரோக்கிய நன்மைகள் என்னவென்றால், செரிமான பிரச்னையை குறைக்கின்றன. உடல் வெப்பத்தை தணிக்கின்றன. குடல் புண்களை ஆற்றுகின்றன.

அதிக கால்சியம், மெக்னீசியம் உள்ளன. இதனால் எலும்புகள் வலுவாகும். மொந்தன் என்று அழைக்கப்படும் வாழைப்பழமும் நாட்டு பழத்திற்கு கீழே வரும்.

### 3. செவ்வாழை

மற்ற வாழைப்பழங்களில் மஞ்சள் நிறத்திலிருந்து இதன் நிறம் சிவப்பு நிறமாக தனித்து காணப்படும். இதில் பீட்டா கரோட்டின், பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் போன்ற தாதுக்கள் அதிக அளவில் உள்ளன. அதிக நார்ச்சத்தை கொண்டுள்ளன. இதய நோய் மற்றும் புற்றுநோய் அபாயத்தைக் குறைக்க உதவும். எலும்பு மற்றும் கண்களின் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வைக்கின்றது. சளி, ஆஸ்துமா, அல்லது இருமல் உள்ளவர்கள் இரவில் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

### 4. கற்பூரவள்ளி

கற்பூரவள்ளி வாழைப்பழத்திலுள்ள வைட்டமின்கள், மினரல்கள் மற்றும் நார்ச்சத்து காரணமாக இது பல ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது. இது செரிமானத்தை மேம்படுத்தவும், எலும்புகளை வலுப்படுத்தவும், சளி மற்றும் இருமலுக்கு நிவாரணம் அளிக்கவும், உடலுக்கு ஆற்றலை வழங்கவும் உதவுகிறது. இதில் வைட்டமின் ஏ, பி6, மற்றும் சி, மக்னீசியம், பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்து அதிகளவில் உள்ளன. மேலும் இது சரும பிரச்னைகளுக்கும் பயன்படுகின்றன.

### 5. நேந்திரன்

நேந்திரன் என்பது கேரளத்திலும் தமிழ்நாட்டின் திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களிலும் அதிகம் விளையும் ஒரு வகை வாழைப்பழமாகும். பொதுவாக இவ்வகைப் பழம் சிப்ஸ¬க்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. நேந்திரன் பழம் இதய ஆரோக்கியத்திற்கும், சரும பிரச்னைகளை தீர்க்கவும், அல்சர் போன்ற செரிமான பிரச்னையை குறைக்கவும், நரம்புத் தளர்ச்சியை குணப்படுத்தவும், சர்க்கரை அளவை கட்டுப்பாட்டுக்குள் வைக்கவும் உதவுகிறது.

### 6. ரஸ்தாளி

தமிழ்நாட்டில் பரவலாக சாகுபடி செய்யப்படும் வாழை வகைகளில் இதுவும் ஒன்றாகும். இது வைட்டமின்கள், கால்சியம், பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் சுண்ணாம்புச்சத்து போன்ற ஊட்டசத்துக்களைக் கொண்டுள்ளது. இது உடல் ஆரோக்கியத்திற்கும், வளர்ச்சிக்கும் உதவுகிறது. பொட்டாசியம் அதிகமாக இருப்பதால் வயிறு சம்பந்தமான அல்சர், செரிமானம் போன்ற பிரச்னைகளை தீர்க்கின்றன.

### 7. பச்சை வாழைப்பழம்

பச்சை வாழைப்பழம் பழுத்த வாழைப்பழத்தை விட, குறைந்த இனிப்பும், கலோரியும், பரவலான ஊட்டச்சத்துக்களையும் கொண்டுள்ளது. இது இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தவும், செரிமான ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கவும் உதவுகிறது. பச்சை வாழைப்பழத்தில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலைப் போக்க உதவுகிறது.

### 8. பேயன் வாழைப்பழம்

இந்த வாழைப்பழத்தின் தோலானது கெட்டியாக காணப்படும். இதில் இனிப்பு சுவை அதிகமாக காணப்படும். செரிமான பிரச்னையை குறைக்கிறது. அதுமட்டுமில்லாமல் குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும், எலும்பு வளர்ச்சிக்கும் உதவுகிறது. குடல் புண்களை குணப்படுத்த உதவுகிறது. இது உடலுக்குத் தேவையான பல ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.

### 9. மலைவாழைப் பழம்

இந்த வாழைப்பழங்களில் சிறிய மலை வாழை, பெரிய மலை வாழை என்று இரண்டு வகைகள் உள்ளன. இரண்டிலும் பல்வேறு ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன. மலச்சிக்கலைப் போக்க உதவுகிறது. செரட்டோனின் ஹார்மோன் உற்பத்தியை அதிகரித்து மகிழ்ச்சியான உணர்வைத் தருகிறது. அதேபோல் உடலுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கிறது. பெரு மலைப்பழம் உடலுக்கு அதிக சூட்டைத் தருவதால், குளிர் பிரதேசங்களில் வாழ்பவர்கள் இதைச் சாப்பிடலாம்.

இதையும் படியுங்கள்:

வீங்கிப்போன கால், சுருண்ட நரம்பு... இந்த 3 நிமிஷ பயிற்சியை செஞ்சா போதும்!

*Types of Bananas*

### 10. ஏலரிசி வாழைப்பழம்

ஏலரிசி வாழைப்பழம்- இவை 'ஏலக்கி வாழைப்பழம்' என்றும் அழைக்கப்படுகின்றன. மற்ற வாழைப்பழங்களை விட, பார்ப்பதற்கு சிறிய அளவில் இருக்கும். இனிப்பான மற்றும் சத்தான வாழைப்பழ வகையாகும். இதில் வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் போன்ற ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன. அதேபோல் மாதவிடாய் பிரச்சனைக்கும் உதவுகின்றன.

JOB VACANCY
• Nurse (ICU/NICU/OT/Casualty/Labour/Ward)
• Lab Technician
• AC Technician
• Accountant
• Reception - Billing
• House Keeping
• Ward Boy
AMRIT MEDICAL CENTRE
No. 73/28, Dr. Alagappa Road, Purasawalkam, Chennai - 600 084.
Call : +91 7695957120
calling time 11.00 am to 5 pm

ஆட்கள் தேவை
திருநெல்வேலியில் வீட்டுமனைகள் விற்க ஆண் பெண் தேவை:
6385434442

லக்ஸீரி ஃபேஷன் ஸ்டுடியோவிற்கு அனுபவமுள்ள, திறமையான, நுணுக்கமான
Pattern Master / Tailor தேவை
தகுதி: லக்ஸீரி / டிசைனர் பிராண்டில் அனுபவம், உயர்தர டெய்லரிங், கட் & ஃபிட் நுணுக்கம்
சென்னை
Cont: 99402 23595

WANTED
நகைக்கடன் நிதி நிறுவனத்திற்கு
மேனேஜர், உதவி மேனேஜர் தேவை
(பெண்கள் மட்டும்)
(முன் அனுபவம் இருத்தல் அவசியம்)
இடம்: நாகர்கோவில், குளச்சல், மார்த்தாண்டம், கன்னியாகுமரி, குலசேகரம், புதுக்கடை, கருங்கல், தக்கலை, திட்டுவிளை, அருமனை
நாகர்கோவில் - ஆபீஸ் அசிஸ்டன்ட்
(ஆண்கள் மட்டும்)
கல்வித்தகுதி : Any Degree
சம்பளம் : நல்ல சம்பளம் வழங்கப்படும்
தொடர்புக்கு: 9443338283, 7373732622

தேவை
வீட்டில் தங்கி பணிபுரிய அனுபவமிக்க
சமையல் பெண் தேவை.
வயது: 35-50 வரை
9524917531
(Contact between 9 am - 5 pm)

T.V & Bros - கோவை
சேல்ஸ் மேன்
BILLING CLERK
டிரைவர் (Badge)
டெலிவரி ஆட்கள்
99944 01022

ஆட்கள் தேவை
பாதுகாவலர்
சுங்கம் (கோவை) பகுதிக்கு நிரந்தர பணிக்கு
ஆள் தேவை உள்ளூர் மட்டுமே.
96297 95018

AllIndiaJobz
FREE Job Placements
www.allindiajobz.com
FREE JOB PLACEMENT
WHATSAPP US / CALL US
9337501889/7789941009
Urgent Hiring !! Hurry Up
Multiple Job Openings fror Freshers
Refer Your Friends who are searching jobs



# வேலைவாய்ப்பு களஞ்சியம்

## வங்கியில் பணி வாய்ப்பு



விவசாய, ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியில் (நபார்டு) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'அசிஸ்டென்ட் மேனேஜர்' பிரிவில் பொது 48, ஐ.டி., 10, நிதி 5, சி.ஏ., 4, செக்யூரிட்டி 4, விவசாயம் 3, சட்டம் 2, பொருளாதாரம் 2, மீன்வளம் 2, உணவு தொழில்நுட்பம் 2 உட்பட மொத்தம் 91 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.எஸ்சி., / பி.பி.ஏ., / பி.இ., / பி.டெக்., / பி.எல்., / எம்.ஏ.,

வயது: 21-30 (1.11.2025ன் படி)

தேர்ச்சி முறை: பிரிலிமினரி, மெயின் தேர்வு, நேர்முகத்தேர்வு

தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, வேலூர், ஈரோடு, விருதுநகர், நாகர்கோவில், தஞ்சாவூர், விழுப்புரம்.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 850. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 150

கடைசிநாள்: 30.11.2025

விவரங்களுக்கு: nabard.org

## சுங்கத்துறையில் வேலை

கேரளாவின் கொச்சியில் உள்ள மத்திய சுங்கத்துறை அலுவலகத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மாலுமி 11, டிரேட்ஸ்மேன் 3, கிரீசர் 4, சீனியர் ஸ்டோர்கீப்பர் 1 என மொத்தம் 19 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு / ஐ.டி.ஐ.,

வயது: 18 - 25, 18 - 30 (15.12.2025ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

*Office of the commissioner of customs (Preventive), 5th floor, Catholic centre, Broadway, Cochin -- 682 031.*

கடைசிநாள்: 15.12.2025

விவரங்களுக்கு: cenexcisekochi.gov.in

## மத்திய அரசில் பணி வாய்ப்பு

மத்திய அரசின் ரப்பர் வாரியத்தில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சயின்டிஸ்ட் 29, சயின்டிபிக் அசிஸ்டென்ட் 10, எலக்ட்ரீசியன் 3, டெக்னிக்கல் ஆபிசர் 2, புள்ளியியல் இன்ஸ்பெக்டர் 2, சிஸ்டம் அசிஸ்டென்ட் 1 உட்பட மொத்தம் 51 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு / ஐ.டி.ஐ.,/டிப்ளமோ / பட்டப்படிப்பு

வயது: பிரிவு வாரியாக மாறுபடும்.

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1500/ ரூ. 1000. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 1.12.2025

விவரங்களுக்கு: recruitments.rubberboard.org.in

## அழைக்கிறது அணுமின் நிலையம்

இந்திய அணுமின் நிலைய நிறுவனத்தில் (என்.பி.சி.ஐ.எல்.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.



துணை மேனேஜர் பிரிவில் எச்.ஆர்., 31, பைனான்ஸ், அக்கவுன்ட்ஸ் 48, மெட்டீரியல் மேனேஜ்மென்ட் 34 உட்பட மொத்தம் 122 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: எம்.பி.ஏ., / பி.எல்., / எம்.ஏ.,

வயது: 18 - 30, 21 - 30 (27.11.2025ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு.

தேர்வு மையம்: சென்னை.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 27.11.2025

விவரங்களுக்கு: npcilcareers.co.in









# அரசியல் Talks...



## ஸ்டாலின் பிரசாரத்தால் பா.ஜ., அமோக வெற்றி



பீஹாரில், தமிழக முதல்வர் ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டதால், பா.ஜ., கூட்டணி 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்றது. தமிழகத்திலும், சட்டசபை தேர்தலில் பா.ஜ., கூட்டணி 200 தொகுதியில் வெற்றி பெறும். எதிர்கட்சியாக இருந்தபோது, 'இளம் விதவைகள் அதிகம் உள்ள மாநிலம் தமிழகம்' என பேசிய தி.மு.க., - எம்.பி., கனிமொழி, இப்போது, அதுபற்றி வாய் திறப்பதே இல்லை. டாஸ்மாக் வாயிலாக, ஆண்டுக்கு 50 ஆயிரம் கோடி ரூபாய், தி.மு.க., அரசுக்கு வருமானம் வருகிறது. இது தவிர, கள்ளச்சாராயம் வேறு. என தமிழக பா.ஜ. தலைவர் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

## விரைவில் அதிமுக ஒருங்கிணைப்பு நிகழும்...



செய்தியாளர்களுக்கு முன்னாள் அமைச்சர்செங்கோட்டையன் கூறியதாவது:-

விரைவில் அதிமுக ஒருங்கிணைப்பு நிகழும், நல்ல முடிவாக இருக்கும். அதிமுகவை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாஜக எப்போதும் தம்மை அழைத்து அறிவுறுத்தல் வழங்கியது இல்லை. அதிமுக ஒருங்கிணைக்க வேண்டும் என பாஜக அறிவுறுத்தியதாக கடந்த 7-ந் தேதி கூறியிருந்த நிலையில் இந்த பதிலை கூறினார். தவெக கட்சியுடன் கூட்டணி வைக்க உள்ளீர்களா என்ற கேள்வி தற்போதைக்கு எந்த கருத்தும் சொல்ல இயலாது என கூறினார்.

## தி.மு.க.,விடம் அதிக இடங்கள் கேட்போம்

பீகார் தேர்தலில் பா.ஜ., வெற்றி பெற்றாலும், ஜனநாயகம் தோல்வி அடைந்துள்ளது. 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதில், சிறுபான்மையினர் ஓட்டுகளே அதிகம்.

பீஹார் நிலையே மேற்கு வங்கத்திலும், தமிழகத்திலும் நீடிக்கும் என கணிப்பது சரியல்ல .

இங்கே திராவிடம் செதுக்கப்பட்ட மண். எஸ்.ஐ.ஆர்., பணிக்கு, தி.மு.க., நிர்வாகிகள் உதவி தான் செய்து வருகின்றனர். நாங்கள் 2021 சட்டசபை தேர்தலில், ஆறு இடங்களில் போட்டியிட்டோம். வரவுள்ள தேர்தலில் கூடுதல் இடங்களை தி.மு.க., விடம் கேட்போம் என இ.கம்யூ., மாநில செயலர் வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

## கட்சி துவங்கியதுமே ஆட்சிக்கு வர முடியாது



பழனிசாமி எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால், அரசு மீது குறை சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற நிலையில் இருக்கிறார்.

தமிழகம் விவசாயம் சார்ந்த மாநிலம். நவ., - டிசம்பரில் மழை பெய்து, விவசாய பணி முழு வேகத்தில் நடக்கிறது. ஜனவரியில் பொங்கல் திருவிழா நடக்கவிருக்கிறது. அடுத்த ஓரிரு மாதத்தில் சட்டசபைக்கான தேர்தல் நடக்கவுள்ளது. இச்சூழலில் வாக்காளர் திருத்தப் பணிக்கு அவசியம் ஏன்?

தி.மு.க., 1949ல் துவங்கி, 1957ல் தான் தேர்தலை எதிர்கொண்டது. அதுவரை மக்களின் மனதை அறிந்து, மக்களுக்காக போராடி, மக்கள் விரும்பிய பின்னர் தான் தேர்தலை சந்தித்தது. ஆனால், கட்சி துவங்கி, உடனே தேர்தலை சந்தித்து, ஆட்சிக்கு வர நினைக்கின்றனர். அதெல்லாம் இங்கு நடக்காது என அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

WANTED
DEVELOPMENT OFFICER
Qua: 12th,Dip & Any Degree
Male Only With
Two wheeler must
Age:21-35
KURUMBAPALAYAM,CBE
730 539 8008
SAA

WANTED
ALAGU SANITARY & HARDWARES
Ramnagar, Gandhipuram, CBE
- Experienced Staff -
• Sales • Accounts Asst
• Godown Incharge
3 - 5 years experience. F/M
Freshers are also welcome
Attactive Salary + Inc
89032 19125

Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889

COCONUT FARM FOR SALE
COIMBATORE
Surrounding Only
62 lakhs Budget
73735 37611
96297 23611
SAA

உங்கள் இடம் கண்டுபிடித்து விற்க
கோவையில்
நீங்க வாங்கிய இடம்
எப்பகுதியில் இருந்தாலும்
விற்பனை செய்ய
அரசு அங்கீகாரம் பெற்ற முகவர்
SIVAKUMAR
TN-RERA/ AGENT/0017/2021
9362655159

PLACE YOUR ADVERTISEMENTS
Whatsapp
81228 36299

TUITION A PLUS ACADEMY
WANTED STAFF
MA English
M.com
MA
BSc/MSc Hindi
MSc maths
MSc chemistry
MSc Physics
MSc Biology
Ct: 8667070105

ராயபுரம்
சிமின்ட்ரி ரோடு அருகில்
கமர்ஷியல் பில்டிங்
வாடகைக்கு
Ground Floor 6000Sq.ft
1st Floor 6000 Sq.ft
அரசு, தனியார் அனுகவும்
94444 13395
044-48609138

OFFICE SPACE FOR RENT @ OMR - SIRUSERI
PERFECT TOWERS
G + 3 FLOORS
EACH FLOOR - 5500 Sqft
(Adjacent to Sify / TCS)
(Partially also Available)
Covered Parking / Genset
Ct: 95001 29602










# பேக்கரி பொருள்கள் தயாரித்தல் பயிற்சிக்கு விண்ணப்பிப்பது எப்படி?



தினை வகைகள் கொண்டு பேக்கரி பொருள்கள் தயாரித்தல் பயிற்சி தமிழ்நாடு அரசால் 3 நாள்கள் வழங்கப்படுவது

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாள்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் தினை வகைகள் கொண்டு பேக்கரி பொருள்கள் தயாரித்தல் பயிற்சி வரும் 25.11.2025 முதல் 27.11.2025 தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

இந்த பயிற்சியில் பேக்கரி பொருள்களின் கோதுமை வெண்ணெய் பிஸ்கட், தினை பால் பிஸ்கட், தினை ஜீரா குக்கீ, செரிமான குக்கீகள், ராகி நட்ஸ் குக்கீகள், மல்டிமில்லட் குக்கீகள், சோளம் சாக்லேட் பிஸ்கட், கம்பு நெய் பிஸ்கட், கருப்பு கவுனி பாதாம் குக்கீ, தினை ஓமம் பிரவுன் குக்கீ, பிரவுன் ஓமம் பிரவுன் குக்கீ, ராகி, சாமாமில் பிரவுன் குக்கீ ஃபட்ஜி பிரவுனி, கருப்பு கவுனி பிரவுனி, டபுள் சாக்லேட் பிரவுனி, கோதுமை வெண்ணிலா பஞ்சு, ராகி சாக்லேட் கேக், தினை வாழை கேக், சோளம் கேரட் இலவங்கப்பட்டை கேக், முழு கோதுமை ரொட்டி, ராகி தினை ரொட்டி, மல்டிமில்லட் ரொட்டி, பால் ரொட்டி வகைகள் எப்படி தயாரிப்பது குறித்து இந்த பயிற்சியில் விளக்குவார்கள். மேலும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்படும்.

இந்த பயிற்சியில் 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்சம் பத்தாவது தேர்ச்சி பெற்ற ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (இருபாலரும்) விண்ணப்பிக்கலாம். இந்த பயிற்சியில் பங்குபெற வருபவர்களுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி வசதியும் உள்ளது. தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இந்த பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்கள் தேவைப்படுவோர் www.editn.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை படித்து தெரிந்து கொள்ளலாம்.

மேலும், அலுவலக வேலை நாள்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600 032 என்ற முகவரியிலோ அல்லது 8668102600 / 99436 85468 தொலைபேசி, கைபேசி எண்கள் தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

பயிற்சியில் பங்குபெறுபவர்களுக்கு அரசு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியில் பங்குபெற முன்பதிவு அவசியம்.

## சமையல் குறிப்புகள்...

- பொரியல், வறுவலில் காரம் அதிகமாகிவிட்டால் ரஸ்க்கை தூள் செய்து தூவினால் சரியாகிவிடும்.
- உப்புமா மீந்து விட்டால், மைதா மாவில் சிறிது எண்ணெய் கலந்து பிசைந்து, அதில் உப்புமாவை சிறு உருண்டைகளாக்கி பூரணம் போல் வைத்து காரபோளி செய்யலாம். ருசியாக இருக்கும்.
- சப்பாத்தி மீந்து போனால், அதனை மிக்சியில் போட்டு அரைத்து சுவையான உப்புமா செய்யலாம்.
- துவரம்பருப்பு வேகவைக்கும் பருப்புடன் ஒரு டீஸ்பூன் வெந்தயத்தையும் கலந்து வேகவைத்தால் சாம்பார் இரவு வரை கெடாமல் இருக்கும்.
- கோதுமை மாவை கரைத்து அதில் ஒரு டம்ளர் மோர் ஊற்றி கரைத்து உடனே தோசை ஊற்றலாம்.
- பருப்புகள், பீன்ஸ் வேகவைக்கும் போது முதலிலேயே உப்பு சேர்க்கக்கூடாது. ஆரம்பத்திலேயே உப்பு சேர்த்தால் வேக நிறைய நேரம் எடுக்கும்.
- பக்கோடா செய்யும்போது கடலைமாவுக்குப் பதிலாக பொட்டுக்கடலை மாவை பயன்படுத்தினால் சுவை கூடுவதோடு, வயிற்றுக் கோளாறுகள் வராது.

# அரசியல் Talks...



## அறிவு இருக்கிறவன் திருவிழா நடத்துறான்: உதயநிதி ஸ்டாலின்



சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற அறிவு திருவிழாவில் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பேசினார். அப்போது "எப்படி நீங்கள் அறிவு திருவிழா நடத்தலாம். யாரைக் கேட்டு நடத்துறிங்க. எதுக்காக நடத்துறிங்க. அறிவு இருக்கிறவன் திருவிழா நடத்துறான். அறிவு திருவிழாவில் அவர்கள் விமர்சித்து பேசிவிட்டோம் என்ற கோபம் வேற. எப்படி போலீஸ் பெயரை கேட்டால், திருடனுக்கு பயம் வருமோ, அதேபோல் அறிவு என்ற வார்த்தையை கேட்டாலே அவர்களுக்கு அலர்ஜி" எனப் பதிலடி கொடுத்துள்ளார்.

## தி.மு.க.,வை வெல்ல எந்த சக்தியும் இல்லை



எஸ்.ஐ.ஆர்., எனப்படும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி தேவையில்லை என்பது தி.மு.க., நோக்கம் அல்ல. எஸ்.ஐ.ஆர்., பணிக்கு போதிய கால அவகாசம் இல்லை என்பதால் தான் எதிர்க்கிறோம். பீஹாரில் நடந்தது போல், தமிழகத்தில் நடக்காது. பீஹார் மாடல் தமிழகத்தில் எடுபடாது. தி.மு.க கூட்டணி உறுதியானது; வலிமையானது. இதை சுக்கு நூறாக உடைக்க எந்த சக்தியும் இல்லை. பிரதமர் மோடி காணும் கனவு, தமிழகத்தில் பலிக்காது. தி.மு.க., கூட்டணி, எந்த அளவுக்கு வலிமையானது என்பதை 2026 தமிழக சட்டசபை தேர்தலில் நிரூபிப்போம். தி.மு.க.,வை வெல்ல இந்தியாவில் எந்த சக்தியும் இல்லை என அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

## தங்க மகனாக பழனிசாமி ஜொலிக்கிறார்...



ஸ்ரீவில்லிபுத்துாரில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி பேசியதாவது: மத்தியில் தெய்வீகமான, பலமான பாரதத்தை உருவாக்கும் ஆட்சி, பிரதமர் மோடி தலைமையில் அற்புதமாக நடக்கிறது. தமிழகத்தின் தங்க மகனாக பழனிசாமி ஜொலிக்கிறார். தெய்வீக பக்தி, தேச பக்தி கொண்ட அவரது ஆட்சியில், தமிழகம் பொற்காலமாக இருந்தது. ஆனால், தி.மு.க., ஆட்சியில் சொத்து வரி, தொழில் வரி என பல வரிகள், பல மடங்கு உயர்ந்து விட்டன. விலைவாசியும் அதிகரித்ததால், அனைத்து தரப்பு மக்களும் அவதிப்படுகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## SIR நடவடிக்கையால் ஒரு கோடி பேர் வாக்குரிமையை இழப்பர்!



வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை உடனடியாக நிறுத்த வலியுறுத்தி சென்னையில் சீமான் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மத்திய அரசுக்கு எதிராகவும், தேர்தல் ஆணையத்திற்கு எதிராகவும் கோஷம் எழுப்பப்பட்டது.எழும்பூரில் போராட்டம் நடத்தினர். இந்நிலையில், செய்தியாளர்களிடம் பேசிய சீமான் கூறியதாவது:-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை அவசர அவசரமாக கொண்டு வருவது ஏன்? திடீரென போலி வாக்காளர்களை கண்டு பிடித்தது போல பேசுவது ஏன்? ஈரோடு இடைத்தேர்தலில் கள்ள ஓட்டு போட்டது தேர்தல் ஆணையத்திற்கு தெரியாதா? ஒரே மாதத்தில் 6 கோடி வாக்காளர்களை எப்படி சரிபார்க்க முடியும். ஓராண்டு கால அவகாசம் எடுத்து எஸ்ஐஆர் பணிகளை செய்திருக்க வேண்டும். இந்த நடவடிக்குகையால் குறைந்தது ஒரு கோடி பேர் தங்களது வாக்குரிமையை இழப்பார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.





















Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081.
Editor: R.S.ROSHINE, e-mail: vaigaraiyilpaperboy@gmail.com